பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
கலா
விற்பனை நிலையம்
திருநெல்வேலிச்சந்தி
யாழ்ப்பாணம்
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 22 வியாழக்கிழமை (07-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 353

## ★ மட்டக்களப்பில் கண்ணிவெடித் தாக்குதல்

# பஸ்வண்டி வாவிக்குள் வீழ்ந்தது

# நான்கு பேர் பலி; 22 பேர் காயம்!

### பொலிஸார் தீவிர விசாரணை

(நமது மட்டக்களப்பு, ஏறாவூர் நிருபர்கள்)

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் என்ற இடத்தில் நேற்று இடம்பெற்ற நிலக்கண்ணிவெடிச் சம்பவத்தின்போது பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்களில் ஒரு பொலிஸார் உட்பட 4 பேர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். இரண்டு பொலிஸார் உட்பட 19 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த 19 பேரும் மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5 பேரின்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே பொலநறுவ வீதியில் சத்துருக்கொண்டான் என்னும் இடத்தில் நேற்று பகல் ஒரு மணிக்கு இடம் பெற்ற நிலக்கண்ணி வெடித்தாக்குதலின் போது ஒரு பொலிஸார் உட்பட நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களுள் பஸ் சாரதியும் அடங்குவர்.

கண்ணி வெடித்தாக்குதலுக்கு இலக்கான இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டி அருகில் இருந்த வாவிக்குள் தூக்கி எறியப்பட்டது.

கண்ணி வெடித்தாக்குதலுக்கு இலக்கான பஸ் வண்டி மட்டக்களப்பில் இருந்து பிரதான வீதியூடாக கொழும்பு நோக்கிச் சென்று

(8ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு உணவு மருந்துஅனுப்பினால்

# யாழ். நூலகத்தை புனரமைக்க ஒருவருட சம்பளத்தை வழங்குவேன்

### பாராளுமன்றில் ரணில் உரை

(கொழும்பு)

வன்னிப் பகுதிக்கான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அரசாங்கம் அனுப்பி வைப்பதற்கு இணக்கம் தெரிவிக்குமானால் யாழ்ப்பாண நூல் நிலைய புனரமைப்பிற்கு எனது ஒரு வருட சம்பளப் பணத்தினை வழங்கத் தயாராக இருக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனதுஉரையின்போது வன்னிக்கான உணவு, மற்றும் மருந்துப் பொருட்களை தங்குதடையின்றி அனுப்பிவைக்குமானால் ஐக்கியதேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒருமாதச் சம்பளத்தைதையும் பெற்றுத் தருகிறேன் என்று கூறினார்.

கைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் லெஸ்லி குணவர்த்தன யாழ்ப்பாணம் பொதுநூல

(8ஆம் பக்கம் பார்க்க)

# கினிகிர-5 ராணுவ நடவடிக்கையில் 12 படையினர் பலி; 36பேர் காயம்

(கொழும்பு)

சாவகச்சேரிக்கு மேற்கே இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கினிகிர-5 இராணுவ நடவடிக்கையின் போது படையினரின்நகர்வை எதிர்த்து விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் போது கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை பன்னிரெண்டாகவும் காயமடைந்தோரின் எண்ணிக்கை 36 ஆகவும் உயர்ந்திருப்பதாக விஷேட தகவல் ஊடகம் நேற்று செய்திவெளியிட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் மோட்டார் பீரங்கித் தாக்குதல்களை சரமாரியாக மேற்கொண்டனர்.

இதன்போது இராணுவத்தினர் பலத்த காயங்களுக்கு

(8ஆம்பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து மேலும் சிலர் நாடுகடத்தப்படலாம்

(சென்னை)

இந்தியாவிலிருந்துமேலும் சில ஈழத்தமிழர்கள் நாடுகடத்தப்படலாமென அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பேசிவரும் ஈழ அமைப்புகளின் பிரதிநிதிகளை கைது செய்து காவலில் வைப்பதைவிட அவர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## "லங்காமுடித்த" கப்பல் நாளை புறப்படும்

''லங்கா முடித்த'' பயணிகள் கப்பல் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுமென நான் இணைப்பாளர் எஸ். குகராஜன் தெரிவித்தார்.

இதில் பயணம் செய்வோருக்கான பயணச்சீட்டு இன்று வழங்கப்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## சமாதானப் பேரணிக்கு பொலிஸார் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சமாதானப் பேரணிக்கு இறுதி நேரத்தில் பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர்.

நாட்டில் சமாதானம் வேண்டி இம்மாதம் 10ந் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பேரணியும் புனித அடைக்கலநாயகி, புனித

(8ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை குழப்பும் செய்திகளுக்கு தணிக்கை?

[கொழும்பு]

நோர்வேஅரசின் மத்தியஸ்தத்துடன் பொது ஜன ஐக்கியமுன்னணி அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும்இடையே இடம்பெறவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் நோக்குடன்தகவல்ஊடங்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வைத்திய நிபுணர் சாதனை சிறுவன் உயிர் பிழைத்தான்

சுவாசக் குழாயினுள் கச்சான் பருப்பு சிக்கியதனால் மூச்சுத் திணறி உயிராபத்தான நிலையில் யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இரண்டு வயதுப் பாலகனின் உயிர் வைத்திய நிபுணரின் அபார சாதனையால் காப்பற்றப்பட்டது.

இச் சாதனையை போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் நிகழ்த்தியுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த → 8 ஆம் பக்கம் பார்க்க

## மாட்டுவண்டில் ஊர்வலம் நேற்று நடந்தது

(கொழும்பு)

யாழ். மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தி மகேஸ்வரன் திட்டமிட்டபடி பாராளுமன்றத்திற்கான மாட்டு வண்டில் பயண ஊர்வலத்தை நேற்று நடத்தினர்.

மாட்டு வண்டில் ஊர்வலம் வெலிக்கடைச் சந்தியில் இருந்து நேற்றுக்காலை 8.45

→8 ஆம் பக்கம் பார்க்க

# பேச்சுக்கு முன் நிபந்தனையாக யுத்தநிறுத்தத்தை அரசுஏற்காது!

### பிரதமர் ரட்ணசிறி அறிவிப்பு

(கொழும்பு)

நோர்வேயின் பிரதிநிதியை உத்தியோக பூர்வமான மூன்றாந்தர அனுசரணையாளராக செயற்படும்படி அரசாங்கம் வேண்டுகோள் விடுப்பதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் நேற்று முன்தினம் பேசிய பிரதமர் விடுதலைப் புலிகள் நோர்வேயின்பிரதிநிதியூடாக தமது சமாதான விருப்பத்தை வெளியிட்டுள்ளனர். ஆனால் அது நிபந்தனையற்றது தானா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது. எனினும் இது பற்றி அவர்கள் தெளிவுபடுத்தவேண்டும்.

விடுதலைப்புலிகள் தமது உண்மையான விருப்பத்தை வெளிக்காட்டும் போதுபேச்சு

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாளை தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளுக்கான தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பூசி மருந்து நாளை 8ஆந் திகதி காலை 9 மணியளவில் தாவடி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கால்நடை வளர்ப்போர் அவற்றுக்கான தடுப்பூசி மருந்தைப் போட்டுக் கொள்ளுமாறு யாழ். அரச கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ச)

## கோப்பாயில் மையவண்டி சேவை

(நல்லூர்)

கோப்பாய் வடக்கு அந்திய காலச் சேவைச் சங்கத்தின் மையவண்டிச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப் பெற்றுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் இடைநிறுத்தப்பட்டிருந்த இச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம், கோப்பாய் வடக்கு மத்திய பொதுமக்கள் பயனடைவர் எனவும் சங்கத்தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-103)

# இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வந்துவிடுமாம்

## உயர்ஸ்தானிகர் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் யுத்தத்திற்கு நோர்வேயின் முயற்சி மூலம் விரைவில் முடிவு காணப்பட்டு விடும் என இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் சேனக பண்டாரநாயக்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அண்மையில் புதுடில்லியில் இடம்பெற்ற வெளிநாட்டுச் செய்தியாளர் மாநாட்டில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

சமாதான முன்முயற்சிகள் தொடர்பாக, இலங்கை அரசு மிகவும் நம்பிக்கையுடன் சாதகமான முடிவுகளை எடுத்து வருகிறது.

இந்த விவகாரத்தில், இந்தியா புரிந்துணர்வுடன் உறுதியாக செயற்பட்டு வருவது புதிய சமாதான ஒளி ஒன்று தென்படுவதற்கான அறிகுறியாகும்.

இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு அயல் நாடுகளின் நட்பும், புரிந்துணர்வும் அவசியம் என்றும் குறிப்பிட்டார். (உ)

## நீர்கொழும்பில் கைக்குண்டுகள் மீட்பு புதிய தகவல் வெளியாகின

(கொழும்பு)

நீர்கொழும்பில் மேலும் 4 கைக் குண்டுகள் மீட்கப்பட்டதையடுத்து, உள்ளூரில் சட்டவிரோத ஆயுதஉற்பத்தி தொடர்பான புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் மீட்கப்பட்ட மேற்படி குண்டுகளை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான நபர் கொடுத்த முறைப்பாட்டின் பிரகாரம், வத்தளை பகுதியில் உள்ள ஆயுத, தயாரிப்பு நிலையம் ஒன்றினை நீர்கொழும்பு மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் அரசரட்ணம் தலைமையிலான குழுவினர் முற்றுகையிட்டுள்ளனர்.

இதேசமயம் அண்மையில் நீர்கொழும்பு பகுதியில் 2 வெளிநாட்டு நவீன ரக கைக்குண்டுகள் உட்பட 6 கைக்குண்டுகளை மீட்ட பொலிஸார், சந்தேகத்தின் பேரில் இருவரை கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## இடமாற்றம்

(நல்லூர்)

நல்லூர்ப்பிரதேசசபையின் நூலகத்தில் கடந்த 22ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்த திருமதி. த. ஸ்ரீஇராமச்சந்திரன் கடந்த01ஆம் திகதிமுதல் நூலகராகப் பதவியுயர்வு பெற்று, யாழ். மாநகர சபைக்கு இடமாற்றலாகிச் சென்றுள்ளார். (ச-103)

★ ★ ★

பருத்தித்துறை நகரசபையில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய க. மாணிக்கவாசகர் கடந்த 01ஆம் திகதி தொடக்கம் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரம் உப அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையால் இடமாற்றம் செய்யப்பட்ட இவர் பலவருடங்களாக பருத்தித்துறை நகராட்சி மன்றத்தில் கொள்வனவுப் பகுதி எழுது வினைஞராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-111)


கோண்டாவில் — நெட்டிலிப்பாய்
பிள்ளையார் கோவில்

### இராஜகோபுரம் அமைப்பதற்கு தகுதியானவர்களிடம் விண்ணப்பங்கள் கோருதல்

மேற்படி ஆலயத்திற்கு ஐந்து தளத்தில் கோபுரம் அமைப்பதற்கு நிறுவனங்களோ அல்லது தனியாரோ தங்களிடம் உள்ள வரைபடம், செலவீன மதிப்பீடுகள் என்பனவற்றை உடனடியாக சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம். மேலதிக விபரங்களுக்கு பரிபாலனசபைத் தலைவரை கிழமை நாட்களில் மாலை 5-00 மணிக்குப் பின்பும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநேரமும் அவரது இல்லத்தில் சந்தித்து அறிந்து கொள்ளலாம்,

சு. பரஞ்சோதி — தலைவர்
பா. வசீகரன் — செயலாளர்
ச. யோகராசா — பொருளாளர்

மேற்படி ஆலய பரிபாலன சபை



### நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி மீன் கேள்வி அறிவித்தல் - 2001

கேள்விப்பத்திர விநியோகம் - 12. 12. 2000 நண்பகல் 12. 00 மணிவரை.
கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும்- 13. 12. 2000 நண்பகல் 12. 00 மணிவரையும்.
கேள்வி திறக்கும் திகதியும் நேரமும்- 13. 12. 2000 பிற்பகல் 3. 00 மணி.

மஞ்சத்தடி மாட்டிறைச்சிக்கடைக்கு விண்ணப்பிப்பவர்கள் தற்சமயம் நடைபெறும் இடத்திற்கு அண்மையில் காணியைத் தெரிவு செய்து காணிச் சொந்தக்காரரின் சம்மதத்துடன் கிராம சேவையாளரின் சிபார்சுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபைக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம். எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ தலைவருக்குப் பூரண அதிகாரம் உண்டு.

| இறைச்சிக்கடை | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| கொக்குவில் உப-அலுவலகர் | | | |
| 01 கொக்குவில் உப-அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 350/- | 3000/- | 40,000/- |
| 02 கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 350/- | 3000/- | 20,000/- |
| 03 மஞ்சத்தடிமாட்டிறைச்சிக்கடை | 350/- | 3000/- | 40,000/- |

க. மணிபல்லவராஜன்
(ஜே. பி. யூ. எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி.
05 12.2000

(கி-1094)



யாழ். மறைமாவட்டகத்தோலிக்க மக்களுக்கு

### முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் 10-12-2000 ஞாயிற்றுக்கிழமை நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்த சமாதானத்திற்கான செபமாலைப் பேரணி காவல் துறையினரது அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையால் பேரணி நடைபெறமாட்டாது என்பதை அறியத் தருகின்றோம், எனினும் யாழ் மரியன்னை பேராலயத்தில் வழிபாடுகள் காலை 10.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி திருப்பலியுடன் முடிவுறும். பங்குத்தந்தையர்க்கும், மக்களுக்கும் இம்மாற்றத்தினால் ஏற்பட்ட சிரமங்களுக்காக வருந்துகின்றோம்.

இயக்குனர்
யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட
நீதி சமாதான ஆணைக்குழு.

(1990)



யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
சகல வர்த்தகர்களுக்குமான

### அன்பான வேண்டுகோள்

02.12.2000 அன்று பிரிகேட் 512 உடன் நடந்த கலந்துரையாடலில், சகல வர்த்தக ஸ்தாபனங்களும் சனிக்கிழமைகளில்புதியநேரம் பி ப2.30 மணிதொடக்கம் அரைநாளும், ஞாயிற்றுக்கிழமைகள், போயா விடுமுறை, வர்த்தக விடுமுறைகளில் முழுநாளும்பூட்டப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. இவ் அறிவுறுத்தல்களுக்கு அமைய வர்த்தக ஸ்தாபனங்கள் நடக்கத் தவறின் அதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு எமது கழகம் பொறுப்பேற்க மாட்டாது எனபதனை அன்புடன் அறியத் தருகின்றோம்.

குறிப்பு:- இவ் அறிவுறுத்தல் கண்டிப்பாகநடைமுறைப் படுத்தப்படும் என்பதனை சகல வர்த்தகர்களின் கவனத்திற்கும் கொண்டு வருவது எமது கழகத்தின் கடமையாகும்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
இல. 165 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1093)



### நன்றி நவில்கின்றோம்

எனது மகன் இ. ஸ்ரீரங்கநாதன் படையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் இருக்கும் போது அவரை விடுதலை செய்ய அரும்பாடுபட்ட கௌரவ அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் பா. உறுப்பினர்திரு. கே.வி. குகேந்திரன அவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொழில் நுட்பக் கல்லூரி ஆசான்களுக்கும் நிர்வாகத்தினருக்கும், மாணவர் பிரதிநிதிகளுக்கும் சகல பீட மாணவர் குழாமுக்கும், யாழ்ப்பாணம் I. C. R. C. மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செம்பாடு,
மந்துவில்,
கொடிகாமம்.

இப்படிக்கு
வே இரசையா
தந்தை

(1989)

## வடமராட்சியில்
# சட்டவிரோத மின்பாவனை
# தடுக்க மக்கள் உதவி தேவை

### மின்பாவனையாளர் நிலைய அதிகாரி வேண்டுகோள்

(துன்னாலை)

சட்டவிரோத மின்பாவனையாளர்களை சட்டத்தின் முன் நிறுத்தும் நடவடிக்கைக்கு பொதுமக்களின் மிகுந்த அக்கறையும் ஒத்துழைப்பும் தேவை.

இவ்வாறு, இலங்கை மின்சார சபையின்மின் அத்தியட்சகர் அலுவலக பருத்தித்துறை மின்பாவனையாளர் சேவை நிலைய உயர்அதிகாரி ஒருவர்,வடமராட்சிப் பகுதியில் அதிகரித்துள்ள சட்டவிரோத மின்பாவனை குறித்தும் அதனைத்தடை செய்யும் வழிமுறை குறித்தும் விளக்கும் வகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில்;

சட்டவிரோத மின்பாவனையாளரை இனங்காணும் விடயத்தில் பொதுமக்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கினால், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது எமக்குச் சுலபமாய் அமையும்.

இதை விடுத்து, பல்வேறு வேலைப்பளுக்களின் மத்தியில் நாம் இப்பணியையும் ஏற்றுச் செய்தால் அது முழுமையான பணியாக இருக்க முடியாது.

ஆகவே,எம்மிடம் வந்து முறைப்பாடு செய்வதில் காட்டும் ஈடுபாட்டை, களவாக மின்சாரம் பெறுபவர்களை எமக்கு இனங்காட்டுவதில் காட்டினால், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று குறிப்பிட்டார்.

(உ-41)

# உயர் அதிகாரிகள் அலுவலகத்தில் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் எந்த உயரதிகாரிகளும் அலுவலகங்களுக்குச் சமுகம் அளிக்கவில்லை.

அரசாங்க அதிபர்,மேலதிக அரச அதிபர் பிரதேச செயலர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகள் அனைவரும் கொழும்பில் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்குச் சென்றமையினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது.

ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் முதல் முறையாக தேசிய நல்லிணக்க இனவிவகார பிரதி அமைச்சர் சோ.கணேசமூர்த்தி தலைமையில் கொழும்பில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-க)

# கொழும்பு நகர வீடுகளில் புதுவகையில் கொள்ளை

(கொழும்பு)

நீர்மானி பதியும் தொழிலாளர்கள் எனக்கூறி, கொழும்பு நகர வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையடிக்கும் செயலில் ஈடுபட்டு வந்த மூவரை கல்கிற்றவ பொலிஸார்கைது செய்துள்ளனர்.

இவர்கள் வசமிருந்து,30க்கும் மேற்பட்ட வீடுகளில் கொள்ளையிடப்பட்ட ஒன்றரைக் கோடி பெறுமதிமிக்க பணம் மற்றும் பொருட்களையும் பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

12 இலட்சரூபா பெறுமதிமிக்க தங்க ஆபரணங்கள், 5 இலட்சம் பெறுமதியான மின் உபகரணங்கள்,வாகனங்கள் என்பன இவற்றில் அடங்கும்.

(உ-5)

# வன்னிக்கு எம்மையும் கூட்டிச் செல்லுங்கள்

### படையினரின் பெற்றோர் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த இரண்டாந்தடவை வன்னிக்குச் செல்லும்போது தம்மையும் கூட்டிச்செல்லுமாறு காணாமல் போன படையினரின் பெற்றோர் உறவினர் சங்கம் இலங்கைக்கான நோர்வேயின் தூதுவரிடம் கேட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளை பார்ப்பதற்காக தம்மை வன்னிக்குக் கூட்டிச் செல்லுமாறு நோர்வேத் தூதுவரிடம் சங்கம் கோரியுள்ளது.

(வி)

# பேராதனை பல்கலையில் நடைபெற்ற பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் மூவர் அங்கு கடமையாற்றும் ஊழியர்களைத் தாக்கிய காரணத்தால் அங்கு வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதல் நடத்திய மாணவர்களில் ஒருவர் பல்கலைக்கழக வளாகத்தை விட்டுத் தப்பியோடிவிட்டதாகவும் ஏனைய இருவரையும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்ததாகவும் தெரியவருகிறது.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட இவர்கள் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்களது மேற்படி செயற்பாடு தொடர்பாக பொலிஸாரும், பல்கலைக் கழக அதிகாரிகளும் இணைந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ)

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

நல்லூர்பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கொக்குவில் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் அண்மையில்மாநகரசபையினரால் அழிக்கப்பட்டன.

இதனால் கட்டாக்காலி நாய்களின் தொல்லை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-103)

# சொந்த இடங்களுக்கு மக்கள் திரும்புகின்றனர்
## கூ.கிளைகள் அதேஇடத்தில்

(கல்வியங்காடு)

இடம்பெயர்ந்த மக்கள், மீண்டும் தத்தம் இடங்களுக்கு திரும்பிய போதும், இடப்பெயர்வு காரணமாக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகள் சில இன்னமும் உரிய இடங்களில் இயங்க ஆரம்பிக்கவில்லையென பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த வகையில், நல்லூர் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் சொந்த இடங்களுக்கு திருப்பி விட்டனர்

இருப்பினும் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க மூத்த விநாயகர் கிளை (இல 26) இன்னும் பழைய இடத்தில் இயங்க ஆரம்பிக்கவில்லை.

இதனால் இப்பகுதி மக்கள் நிவாரணம் பெறுவதற்கும் தமது பொருட் தேவையை பூர்த்தி செய்வதற்கும் வேறு இடங்களில் அமைந்திருக்கும் கிளைகளை நாடி அலைய வேண்டியுள்ளது [உ-54]

## யாழ்ப்பாணத்தில்
# ஆங்கில படிப்புகள்வட்டம் அண்மையில் ஆரம்பம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில், ஆங்கிலப்படிப்புகள் வட்டம் கடந்த ஞாயிறன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

யாழ்.நாவலர் மண்டபத்தில் இடம்பெற்ற இவ் அங்குரார்ப்பண நிகழ்வில்,75 இற்கும் மேற்பட்ட பல்துறை சார்ந்த ஆங்கில ஆர்வலர்கள் கலந்து கொண்டு,இம் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர்.

ஆங்கில படிப்புகள் வட்ட ஆலோசகர்களாக, யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபரும் ஆங்கில மொழிப் புலமையாளருமான அருட்தந்தை ஏ. ஐ. பேணாட், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் கலாநிதி எஸ்.சுந்தரம் பிள்ளை ஆகியோர் அன்றைய தினம் நியமிக்கப்பட்டனர்.

அத்துடன், 15 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு மாதத்தின் முதலாவது ஞாயிற்றுக்கிழமைகளில் ஆங்கில படிப்புகள் வட்டம் தனது நிகழ்ச்சித் தொடர்களை நடத்துவது எனவும். அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(உ-59)

# இரத்தப் பரிசோதனை

கர்ப்பிணித் தாய்மார்களுக்கான இரத்தப் பரிசோதனை யாழ்.போதனா வைத்தியசாலையின் பாலியல் நோய்த்தடுப்புப் பிரிவு நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

எல்லா கர்பிணித் தாய்மார்களும் ஒவ்வொரு கர்ப்பகாலத்திலும் மேகநோய்க்குரிய இரத்தப் பரிசோதனை கட்டாயமாகச் செய்யப்பட வேண்டும் என பாலியல் நோய்த்தடுப்புப்பிரிவு நிலைய வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

(ச-02)

# லங்கா முடித்த கப்பலில் படையினரும் பயணம்

(கொழும்பு)

திருமலையிலிருந்து யாழ். வரும் லங்கா முடித்த கப்பலில் படையினரும் பயணம் செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இராணுவப்பேச்சாளர் சரத் கருணாரட்ண கருத்துக்கூறுகையில் லங்கா முடித்த கப்பல் இராணுவத்திற்குரிய கப்பலொன்றுப, உதவி செய்யும் நோக்கிலேயே அது பயணிகளின் போக்குவரத்திற்குப் பயன்படுவதாகவும் தெரிவித்தார்.

(ப)

# அனலைதீவு - நெடுந்தீவு பயண பிரச்சினைக்கு தீர்வு

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு - நெடுந்தீவு மக்கள் யாழ்ப்பாணம் வருவதில் இதுவரை காலமும் அனுபவித்து வந்த சிரமங்கள ஈ.பி.டி.பி எம்.பி ஜெகனின் முயற்சியினால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

அனலைதீவு -நெடுந்தீவு மக்கள் இதுவரை படகு மூலம் ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன்கோயில் இறங்குதுறையில் இறங்கி ஒருமைல் தூரம் நடந்தே ஊர்காவற்றுறைக்கு வரவேண்டியுள்ளது.

இது தொடர்பாக ஜெகன் எம்.பி வடபிராந்தியபோக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளர் சொக்கலிங்கத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து கண்ணகை அம்மன் கோயில் இறங்குதுறைக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் கடந்த முதலாம் திகதி முதல் நாளாந்தம் நான்கு தடவைகள் பஸ் சேவை நடைபெற்றுவருகிறது.

778 ஆம் இலக்கப்பாதையில்இப்பேருந்து சேவைநடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது

(உ)

# வீதி திருத்தம் மந்தகதியில் விபத்தை சந்திக்கும் பொதுமக்கள்

(கரணவாய்)

வீதிகளைத்திருத்தும் நோக்குடன் அப்பகுதியில் கற்களைப், பரப்பி அதே நிலையில் நீண்டகாலம் விடுவதால் விபத்துக்கள் பல இடம்பெறுவதற்கு ஏதுவாய் அமைந்திருப்பதாய் வீதிப்பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்:

யாழ்.குடாநாட்டில், வீதிகள் பல சீரற்ற நிலையில் பொதுமக்களிற்கு சிரமமளிக்கும் வகையில்அமைந்திருப்பதை நிவர்த்தி செய்யும் நோக்கில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இருப்பினும், இம்முயற்சியே பொதுமக்களிற்கு மேலும்துன்பம் அளிப்பதாய் கூறப்படுகிறது.

எனவே, பொதுமக்களிற்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தாத வகையில், வீதி திருத்தும் விடயத்தில் துரிதப்போக்கினைக் கடைப்பிடிக்க வேண்டும் என பொதுமக்களால் சம்பந்தப்பட்ட தரப்பினர்க்கு சுட்டிக்காட்டப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-27)

### அன்னதானம்

(நல்லூர்)

திருநெல்வேலி பழங்கிணற்றடிப்பிள்ளையார்ஆலயத்தில் மாதாந்தச் சதுர்த்தித் தினத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

(ச - 103)

# இறங்கு துறை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை இறங்குதுறை வேலை பூர்த்தியடைந்துள்ளது.

யு.என்.எச்.சி.ஆர். நிதித்திட்டத்தின் கீழ் ஐந்து இலட்சம்ரூபா செலவில்இவ்இறங்குதுறை சட்டி முடிக்கப்பட்டுள்ளது.

(ச - 02)

# இராசி பலன்

7 - 12 - 2000
(கார்த்திகை 22, வியாழன்)
ஏகாதசி மு. இ. 8 20 வரை
ரேவதி பி. ப 1. 26 வரை
ராகுகாலம் 1. 47-3 17
சுபநேரம் 7. 47-9 17
சித்தாமிர்தம், ஏகாதசி விரதம்

**மேடம்**
போசன சுகம், சயனசுகம், புதிய சிந்தை, இலட்சுமிகரம்.

**இடபம்**
பிரயாணம், கோபப்படுதல், காரிய தாமதம், பண விரயம்.

**மிதுனம்**
நண்பர்கள் சந்திப்பு, தனலாபம், சந்தோசமான சம்பவம், கீர்த்தி.

**கடகம்**
தொழில் விருத்தி, அதிகாரம், காரியம் கைகூடும், பெரியோர் சந்திப்பு.

**சிங்கம்**
பிரயாணம், சந்தைவழி உறவு, உடல் உபாதை, கட்டுப்பாடு.

**கன்னி**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு, முயற்சி தாமதம்.

**துலாம்**
சுவாரஸ்யம், போசன சுகம், பிரயாணம், கௌரவம்.

**விருச்சிகம்**
பகைவர் விலகுவர், முயற்சி விருத்தி, சுகவாழ்வு, தனவரவு.

**தனுசு**
தாழ்வுநிலை. பிரயாண இடையூறு, மனக்கிலேசம், அபகீர்த்தி.

**மகரம்**
மனச்சோர்வு, தாய்வழி உறவு, தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம்.

**கும்பம்**
பிரயாணம் மகிழ்ச்சியான சம்பவம், முயற்சி பலிதம், தனவரவு.

**மீனம்**
தனவிரயம், வாக்குகலகம், காரிய தாமதம், கௌரவக் குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை

# விஞ்ஞானபாட வினாப் பத்திரத்தில் வரக் கூடியவை

தொகுப்பு : க. மனோகரராஜா

## விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும்

| | | |
|---|---|---|
| 1) | நியூட்டன் | புவியீர்ப்பு விசை |
| 2) | நியூட்டன் | வெள்ளொளியில் 7 நிறங்கள |
| 3) | J.J. தொம்சன் | இலத்திரன் |
| 4) | இரதபோர்ட் | புரோத்தன் |
| 5) | சட்விக் | நியூத்திரன் |
| 6) | ஜோர்ஜ்சைமன் ஓம் | ஓமின்விதி V அல்ஃபா I |
| 7) | ஹேட்ஸ் | வானொலி அலைகள் |
| 8) | வில்லியம் ஹார்வே | குருதிச் சுற்றோட்டம் |
| 9) | லான்ஸ்ரெய்னர் | குருதி இனங்கள் |
| 10) | கிரெக்கமென்டல் | அங்கிகளின் இயல்புகள் கடத்தப்படல் |
| 11) | மென்டலீவ் | ஆவர்த்தன அட்டவணை |
| 12) | லீனியஸ் | அங்கிகளின் பெயரீடு |
| 13) | பர்ஸிலியஸ் | சூத்திரம் எழுதும்முறை |
| 14) | லாவோசியர் | திணிவு மாறாவிதி |
| 15) | பொயில் | எரிவதற்கு வளி அவசியம் |
| 16) | டிமோகிறிற்றிஸ் | அணுபற்றி முதலில் கூறியவர் |
| 17) | தாற்றன் | அணுக்கொள்கை |
| 18) | லூயிபாஸ்ரர் | பாய்ச்சர் முறை பாதுகாப்பு |
| 19) | எல்ரன் | உணவுச்சங்கிலி வரையறுக்கப் பட்டமை |
| 20) | சார்ள்ஸ் டாவின் | கூர்ப்புக் கொள்கை |
| 21) | அரிஸ்டோட்டில் | விஞ்ஞானத்தின் தந்தை |
| 22) | ஹென்றிகுரூக்ஸ் | குரூக்ஸ்குழாய் |
| 23) | சினெல் | ஒளிமுறிவு விதி |
| 24) | வான்ஹெல்மன்ற் | ஒளித்தொகுப்பு |
| 25) | நெல்சன் | நுண்துளைக்கலம் |
| 26) | மக்ஸ்வெல் | தக்கைத் திருகுவிதி |
| 27) | வில்லியம் சோக்லி | திரான்சிஸ்ரர் |
| 28) | ஜோன் பார்டின் | திரான்சிஸ்ரர் |
| 29) | வோல்ரர் பிறைற்றன் | திரான்சிஸ்ரர் |
| 30) | கலிலியோகலிலி | முதலாது தொலைகாட்டி |
| 31) | றொபேட்குக் | நுணுக்குக்காட்டியூடாக தக்கை கலங்களை அவதானித்தவர் |
| 32) | ஜென்சன் | முதலில் ஒளிநுணுக்குக் காட்டி அமைத்தவர் |
| 33) | தொலமி | 48 உடுத் தொகுதிகள் |
| 34) | கிறிஸ்ரியன் ஓர்ஸ்ரட் | மின்னோட்டம் பாயும் கடத்தியை சூழ காந்தப்புலம் ஏற்படும் |
| 35) | அன்ட்ரெமாரி அம்பியர் | நிலையான உருக்கு காந்த ஊசி |
| 36) | வில்லியம் ஸ்டர்ஜன் | வலிமை மிக்க மின்காந்தம் |
| 37) | மைகல் பரடே | மின்காந்தம் |
| 38) | ஆர்ஹீனியஸ் | பச்சை வீட்டு விளைவு |
| 39) | ஆர்தர் சிகிளார்க் (இலங்கை) | தொடர்பாடல் பற்றிய முதல் புனைகதை |
| 40) | ஸரத் குணபால (இலங்கை) | பாத்பைன்டர் வாகனத்தின் கமரா |
| 41) | கிறிஸ்ரியன் பேர்னாட் | இதயமாற்று அறுவைச் சிகிச்சையைச் செய்தவர் |

### தந்தையர்கள்

| | | |
|---|---|---|
| 1) | பாகுபாட்டியல் | காள்வொன்லீனியஸ் (லீனியஸ்) |
| 2) | கூர்ப்பு | சாள்ஸ்டாவின் |
| 3) | ஆவர்த்தன அட்டவணை | மென்டலீவ் |
| 4) | வானியல் | நிக்கலஸ் கொப்பனிக்கஸ் |

# தாயும் தந்தையும் கோரமாக கொலை தனயன் கைது

[கொழும்பு]

பெற்ற தாயையும் தந்தையையும், மிருகத்தனமாக வெட்டிக்கொலை செய்த தனயனை ரத்கம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற இவ் இரட்டைக்கொலை தொடர்பாக விசாரணைகளை நடத்தி வந்த பொலிஸாரால், சம்பந்தப்பட்டவருடைய வீட்டில் இருந்து எடுக்கப்பட்ட கடிதம் ஒன்றின் அடிப்படையிலேயே இக் கைது இடம்பெற்றிருப்பதாய் தெரியவந்துள்ளது.

கைதான நபரை, இம் மாதம் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு காலிமாவட்ட பிரதம நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். [உ-5]

# இராணுவக் கட்டுப்பாடற்ற மட்டு.பகுதிக்கு உரவகை எடுத்துச்செல்ல அனுமதி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு நெற்செய்கைக்கான உரவகைகள் மற்றும் உபகரணங்களை எடுத்துச் செல்ல விதிக்கப்பட்ட தடைகள் உடனடியாக நீக்கப்படும் என மட்டக்களப்பு மாவட்ட சிவில் விவகார இணைப்பதிகாரி எல்.எவ்.ஏ.குணசேகர தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக இனவிவகார தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் சோ.கணேசமூர்த்தி பாதுகாப்பு சிவில் விவகார இணைப்பதிகாரியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்தே இத் தடை நீக்க முடிவு எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## கிறிஸ்தவம் (றோ.க) பகுதி - 1

நேரம் : 1 மணி

தொகுப்பு: மறைக்கல்வி நிலையம்

(நேற்றைய தொடர்ச்சி)

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

21) புனித இஸ்ராயேல் எனப்படும் இறைமக்கள் சமுதாயம் எனப்படுவது.
1) திருச்சபை 2) பங்கு
4) எமதுமறை மாவட்டம் 2) 3 ஆம் வத்திக்கான் சங்கம்

22) விண்ணக காட்சி ஒன்றைக்காண வரம் பெற்றவர்.
1) திருமுழுக்கு யோவான் 2) அருளப்பர் 3) சக்கரியாஸ் 4) புனித அகுஸ்தினார்

23) கத்தோலிக்க விசுவாசத்தை விட அதின ஆச்சரியத்துக்குரிய செல்வம் ஒன்றுமேயில்லை என்றவர்.
1) புனித இஞ்ஞாசியார் 2) புனித கிறகோரியார்
3) புனித அகுஸ்தினார் 4) புனித யோவான்

24) சேனைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்களால் கண்டேன் என்றவர்.
1) ஏசாயா 2) யோவேல் 3) பேதுரு 4) யோவான்

25) உனக்கு விசுவாசம் இருந்தால் கடவுளின் மகிமையைக் காண்பாய் என்ற இறைவாக்கு நிறைவேறியது எச்சந்தர்ப்பத்தில்.
1) கிறிஸ்து மரித்தோரிட மிருந்து உயிர்ப்பிக்கப் பெற்ற போது
2) லாசர் மரித்தோரிடமிருந்து உயிர்ப்பிக்கப்பெற்றபோது
3) நயம், ஊர் விதவையின் மகனுக்கு உயிர் கொடுத்தபோது
4) யாயீர் மகனை உயிர்ப்பித்த போது

26) கிறிஸ்தவன் தூய்மையாகும் பொருட்டு அருள் பெறுவது.
1) இறைகட்டளையை அனுசரிப்பதன் மூலம்
2) திருவருட்சாதன வாழ்க்கை மூலம்
3) இறைமையின் வார்த்தைகளைக் கற்பதன் மூலம்
4) சமுதாயத்தின் நலனைக்கருதி செய்யும் பணிகள் மூலம்

27) நாம் செய்யும் தவச் செயல்களினால்.
1) எமது நற்செயல்களைப் பிறர் பாராட்டுகின்றனர்
2) தீமை செய்யும் தன்மை குறைந்து நன்மை புரியும் எண்ணம் எம்மில் வளர்கின்றது
3) சமுதாயத்திற்கு எதிராக நாம் புரிந்த செயல்களுக்குப் பரிகாரம் செய்யமுடிகிறது
4) உத்தரிக்கிற ஸ்தலத்தில் எமக்குக் கிடைக்கும் தண்டனைகளை குறைத்துக் கொள்ளமுடிகிறது

28) உண்மை என்பதன் கருத்து.
1) சொல்லும் செயலும் உள்ளார்ந்த கருத்துக்கு ஒன்றுபட்டிருக்கின்றது
2) கதைப்பது முன் யோசிப்பது
3) தமக்குத் தெரிந்த அனைத்தையும் வெளிப்படுத்துவது
4) தமக்குத் தீங்கு விளைவிக்காததை மட்டும் வெளிப்படுத்துவது

29) அப்போஸ்தலர் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து தினத்திற்கு முன் இரவு இயேசு.
1) நற்கருணையை ஏற்படுத்தினார்
2) ஜெத்சமெனித் தோட்டத்தில் செபித்தார்
3) அவர்களின் திறமைகளை ஆராய்ந்தார்
4) ஓர் மலையில் ஏறி இரவு முழுதும் செபத்தில் ஆழ்ந்திருந்தார்.

30) 8 ஆம் கட்டளைக்கு இணங்க சமாதானத்துடனும் ஆனந்தத்துடனும் வாழ முடிவது.
1) மற்றவர்களைப் பற்றியும் அக்கறைப்படுவதன் மூலம்
2) ஒருவர் ஒருவரில் நம்பிக்கை வைப்பதன் மூலம்
3) மற்றவர்களின் குறைகளைப் பற்றி பேசாமல் இருப்பதன் மூலம்
4) தங்களிடம் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம்

31) திருப்பலிப்பூசை எல்லாப் பலிகளிலும் பூரணமான பலியாகும் ஏனெனில்.
1) இது உலக இறுதிவரை தொடர்ந்து ஒப்புக்கொடுக்கப்படும்
2) இது இறைவாக்கினர்கள் எதிர்பாத்திருந்த ஒரே பலியாகும்
3) இது சிலுவைப்பலியாகும்
4) இது பழைய உடன்படிக்கைக்கு ஏற்ற பலியாகும்

32) ''உம் மனிதர் அழிவை காண விடமாட்டீர் என்ற இறைவாக்கு
1) கிறிஸ்து மரித்தோரில் இருந்து உயிர்த்ததன் மூலம் நிறைவேறியது
2) நயூன் நகர் விதவையின் மகனை உயிர்ப்பித்ததன் மூலம் நிறைவேறியது
3) யாயீர் மகனை உயிர்ப்பித்ததன் மூலம் நிறைவேறியது
4) லாசரை உயிர்ப்பித்ததன் மூலம் நிறைவேறியது

33) அன்புக்கு உன்னத எடுத்துக்காட்டு.
1) பகைவரை மன்னிப்பதாகும்
2) நண்பனுக்காகத் தன்னுயிரைக் கொடுப்பதாகும்
3) தன்னுடையவை எல்லாம் பிறருக்குக் கொடுப்பதாகும்
4) பிறரின் தேவைகளையெல்லாம் நிறைவு செய்வதாகும்

34) கலப்புத் திருமணத்தால் ஏற்படக்கூடிய பார தூரமான விளைவு.
1) விசுவாசத்தைப்பொறுத்த மட்டில் பெற்றோர்பிள்ளைகள் மட்டில் ஒன்றிப்பின்மை ஏற்படலாம்.
2) உறவினர்களின் ஆசீர் கிடைக்காமல் போகலாம்
3) முழுப்பூசை கிடைக்காமல் போகலாம்
4) விவாகரத்துக்கு வழி கோலலாம்

35) ஓய்வுநாள் ஒன்றில் இயேசு முடவன் ஒருவனைக் குணப்படுத்தியதன் காரணம்.
1) யூதரின் சம்பிரதாயக் கொள்கைகளை ஏளனமாகக் கருதுவதற்காக
2) பழைய ஏற்பாட்டிலே சட்டங்கள் நிலைத்திருக்கவில்லையெனக் காட்டுவதற்காக
3) புதிய ஏற்பாட்டில் ஓய்வுக்குரிய சட்டங்களைத் திருப்பிப்பார்த்தல் வேண்டும்
4) யூத சட்டதிட்டங்களுக்கு அடிமையாகாது ஓய்வுநாளில் நன்மையானவைகளைச் செய்யவேண்டும் என்பதைக்காட்ட

36) வேலை செய்வதன் மூலம் நாம்.
1) இறைவனின் படைப்பு அலுவலில் பங்கு கொள்கிறோம்
2) ஜென்ம பாவத்தினால் இறைவன் அளித்த தண்டனைக்கு உட்படுகின்றோம்
3) இறைவனின்விருப்பத்திற்கேற்ப இவ்வுலகில் அதிக செல்வம்பெற்றுக்கொள்கிறோம்
4) எமக்கு அளிக்கப்பட்ட காலத்தில் மிகச் சிறந்த முறையில் பயன் பெறுகின்றோம்

37) இறை அரசின் மதிப்பீடுகளை நாம் விளங்கிக் கொள்வது.
1) திருச்சபைத் தலைவர்களின் வழிகாட்டல்கள் மூலமாகும்
2) மலைப்பொழிவில் காணப்படும் வசனங்கள் மூலமாகும்
3) ஞாயிறு பூசை மறையுரைகளின் மூலமாகும்
4) பரிசுத்த ஆவியின் கொடையாகிய ஞானத்தின் மூலமாகும்

38) ''என் பரலோக பிதாவும் நானும் ஒன்றாக இருக்கிறோம்'' என்று இயேசு கூறியது.
1) ஜெருசலேம் ஆலய ஆண்டு விழாவில்
2) இயேசுவின் மறுரூப நிகழ்வின் போது
3) கூனிப்பெண்ணைக் குணமாக்கிய போது
4) கல்வாரி மலையில்

39) அவர் மேன்மை மிக்கவராய் இருப்பார். உன்னதத்தின் மகன் எனப்படுவார் எனும் வாக்கு யாரைப்பற்றியது.
1) திருமுழுக்கு யோவான் 2) இயேசுக்கிறிஸ்து
3) பேதுரு 4) எரேமியாஸ்

40) நல்லவர்களும், தீயவர்களும் ஒரே விதமான இறையரசின் செய்தியைப் பெறுகிறார்கள் என்பதைக் கூறும் உவமை.
1) புளிப்பு மா 2) ஊதாரிப்பிள்ளையின் உவமை
3) கோதுமை மத்தியில் தகரை 4) விதைப்பவன் உவமை

பொதுசன நூலகம் [illegible]

## இன்று ஒரு தகவல்

### முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்

ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான். அவன் கடவுளுக்குப் பயப்படாதவன். மனிதரையும் மதியாதவன். யாராவது போய் ஏதாவது கேட்டால் 'இப்ப செய்ய வேணுமோ வேற வேலை இல்லையோ' என்பான்.

அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள். ஒரு நாள் அந்த விதவை அவனிடம் வந்து தனக்கும் தன் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயம் செய்ய வேணும் என்று விண்ணப்பம் பண்ணினாள். ஆனால் அந்த மனிதனோ, அவளையோ அவள் விண்ணப்பத்தையோ பொருட்படுத்தாதுதன்அலுவலிலேயே இருந்தான். வெகுநாள்வரைக்கும் அவள் காரியத்தில் நீதி செய்யமனதில்லாதிருந்தான்.

ஆனால் அவளோ ஒவ்வொருநாளும் அவனுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தாள். எனக்கு நியாயம் செய்து தாரும் எனக்குநியாயம்செய்துதாரும் என்று அலட்டிக்கொண்டே இருந்தாள். பின்பு அவன் நான் தேவனுக்குப் பயப்படாதவனும் மனிதனை மதியாதவனுமாயிருந்தும், இந்த விதவை என்னை அடிக்கடி தொந்தரவு செய்து கொண்டிருக்கிறாளே. இவளுக்கு நீதி செய்யாவிட்டால் நான் நிம்மதியாகத் தூங்க முடியாது என்று தீர்மானித்தான். ஏனென்றால் அவள் தினம் தினம் போய் அவனிடம் அப்படியே விண்ணப்பம் பண்ணிக்கொண்டே இருந்தாள். அதனால் அவனால் நித்திரை கொள்ளக் கூட முடியாதிருந்தது. ஓடி ஒளிக்குமளவுக்கு அவளின் தொந்தரவு இருந்தது. ஆகவே தான் அவன் அவளுடைய நியாயத்தை விசாரித்து நீதிவழங்க முன்வந்தான்.

இந்த உவமானக் கதையை சொன்ன யேசு நாதர், அந்த அநீதியான மனிதனே அடிக்கடி விண்ணப்பம்செய்து வேண்டிக் கொண்டிருந்த அந்த விதவைக்கு நியாயம் செய்தானென்றால், தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறதம் பிள்ளைகள் விடயத்தில் நீடிய பொறுமையாயிருந்து அவர்களுக்கு நியாயம் செய்யாதிருப்பாரோ என்று கேட்டார். சீக்கிரம் நியாயம் செய்வார் என்றார். இந்தக் கதையிலிருந்துஒரு உண்மையைப்புரிந்துகொள்ளமுடியும். எந்தக் காரியத்திலும் சோர்ந்து போகாமல் முயற்சி செய்தால் முடியாதது ஒன்றுமில்லை. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பதே.

தொகுப்பு
மு. கிருஸ்ணன்

## தொல்லை தவிர்ப்புக்குழு கைதிகளின் விபரங்களை சேகரித்துவருகிறது

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் பற்றிய விபரங்களை தொல்லை தவிர்ப்புக் குழு திரட்டிவருகிறது.

இவ்வருடம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை, அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம், இதுவரை வழக்குத் தொடரப்படாமல் உள்ளவர்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபரை தொல்லை தவிர்ப்புக்குழு கேட்டுள்ளது. (வி)

## பட்டதாரி ஆசிரியர் நேர்முகப் பரீட்சை இன்று

### தவறவிட்டோருக்காம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி ஆசிரியர்களுக்கானநேர்முகத்தேர்வு இன்று 7ஆம் திகதி முத்திரைச் சந்தையிலுள்ள வலயம்-01 கல்விப் பணிமனையில் இடம்பெறுமென யாழ். மாவட்ட பட்டதாரிகள் சங்கச் செயலர் ஜீவரூபன் தெரிவித்துள்ளார்.

திருமலைகல்விப்பணிமனை உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி மேற்கண்ட தகவலை வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்; சுமார் இரு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனையில் இடம் பெற்ற பட்டதாரி ஆசிரியருக்கான மீள்நேர்முகப் பரீட்சையின் போது சமுகமளிக்கத் தவறியோருக்கேமேற்படிநேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளதாகவும், சுமார் 106 பேருக்குஅழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

இந் நேர்முகத் தேர்வுடன் நியமனம் வழங்கும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படுமென்றும் மேலும்தெரிவிக்கப்படுகிறது. (க)

## உடுவில் பிரதேச ஆலயங்கள் புனரமைப்பு 19இலட்சம்நிதி ஒதுக்கீடு

(மல்லாகம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களைப் புனரமைப்பு செய்வதற்கென, இவ்வருடம் றான் அமைப்பு 19 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந் நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம், சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத்திற்கென 10 இலட்சமும், மயிலணி முருகமூர்த்தி கோயில் புனரமைப்புக்கென 2 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், மயிலணி அம்மன் கோயில், ஏழாலை ஞான வைரவர் கோயில், தாவடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம், ஏழாலை பெரிய தம்பிரான் கோயில், சுன்னாகம் ஐயனார் கோயில் சங்கானை வெட்டுக்கட்டை சித்தி விநாயகர் கோயில், கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் கோயில் ஆகியவற்றின் புனருத்தாரணப் பணிகளுக்கென தலா ஒவ்வொரு இலட்சமும் ஒதுக்கீடுசெய்யப்பட்டு நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(உ-ப-14)

## ★ நாட்டில் கல்வி அறிவுஅற்றவர்கள் இல்லை என்ற நிலையை ஏற்படுத்த நம்மை நாம் அர்ப்பணிப்போம்

### கோப்பாய் பிரிவு அமைப்பாளர் ரவி தெரிவிப்பு

(அச்சுவேலி)

எதிர்காலத்தில், எமது நாட்டில் கல்வியறிவில்லாதவர்கள் எவருமே இல்லை என்று கூறுமளவிற்கு கல்விச் சேவை புரிய நாம் நம்மை ஆகுதியாக்குவோம்.

இவ்வாறு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் தொகுதி அமைப்பாளர் ரவி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற அச்சுவேலி தெற்கு ஜமுகன் பாலர் பாடசாலையின் கலை விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு ரவி மேலும் உரையாற்றுகையில்,

எங்கெல்லாம் சென்று உயர் கல்விக்கூடங்களில் கற்றாலும் பட்டங்களை பெற்றாலும், பதவிகளில் இருந்தாலும் அதற்கெல்லாம் காரணமாய் அடித்தளமாய் அமைந்தது பால பருவத்தில் கற்ற கல்வி தான்.

இதனைக் கருத்தில் கொண்டு எங்கெல்லாம் பாலர்கள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் பாலர் பாடசாலை அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மேற்படி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட வலி-கிழக்கு பிரதேச சபைத்தலைவர் பூ. குணசிங்கம் தனதுரையில்,

பாலர் பாடசாலைகளின் பணி விஸ்தரிக்கப்பட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது

இதற்கு பெற்றோரும், மற்றோரும், கற்றோரும் ஏற்ற உதவிகள் புரியவேண்டும் என்றார். (உ-14)

## ஊர்காவற்றுறை சிவன் கோவில் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சிவன் கோவில் புனரமைப்பு வேலைகள், வடக்கு-கிழக்கு மாகாண மீள் குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரசபையின் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ்இடம் பெற்று வருகின்றது.

இவ் ஆலயத்தின் புனரமைப்புக்கு வசதியாக சேதமடைந்த நிலையில் காணப்பட்ட உள் கட்டடப் பகுதியை, ஊர்காவற்றுறை கரம்பொன் ஜே-51 கிராமசேவையாளர் பிரிவு சமுர்த்தி செயலணியைச் சேர்ந்த இளைஞர்கள் சிரமதானம் மூலம் இடித்துள்ளனர்.

(உ-75)

## சமுர்த்தி செயலணி அமைப்பு

(அச்சுவேலி)

வலிகிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இருபாலை கிழக்கு ஜே-258 பிரிவிற்கான சமுர்த்தி செயலணி அமைக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு கோப்பாய்மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவற்கொடியோன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறவிருக்கிறது. (உ-14)

## தேவரதம் மீண்டும் புறப்பட்டது

(ஊர்காவற்றுறை)

கடந்த ஓகஸ்ற் மாதத்தில் இருந்து இயந்திரக் கோளாறு காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த, தீவகங்களுக்கிடையிலான போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த தேவரதம் படகுச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் இப்படகுச் சேவையினை மேற்கொண்டு வருகின்றனர். (உ-75)

## சீரற்ற வீதி

(கல்வயல்)

வண்ணார் பண்ணை மேற்கில் உள்ள பீ. ஏ. தம்பி ஒழுங்கை மிகமோசமாகச் சீர்குலைந்து காணப்படுகிறது.

மழைநீர் வடிந்தோட முடியாமல் தேங்கி, சேறும் சகதியுமாகக் காணப்படுவதனால் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளது.

எனவே இது குறித்து உரியவர்கள் கவனத்திற் கொண்டு சீர்திருத்தத்தினை மேற்கொள்ளும்படி நலன் விரும்பிகள் தெரிவித்துள்ளனர்.

(ச-111)

## இராணுவகாவலரண்மீது புலிகள் தாக்குதல்

(கொழும்பு)

திருகோணமலை தோப்பூருக்கு அருகே இருந்த இராணுவக் காவலரண் மீது விடுதலைப்புலிகள் தொடுத்த தாக்குதலை தாம் முறியடித்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

அண்மையில் இடம் பெற்ற இத் தாக்குதல் சம்பவத்திற்கு தாம் பதிலடி கொடுத்தவேளை கொல்லப்பட்ட 4விடுதலைப் புலி உறுப்பினர்களது சடலங்களையும் அவர்கள் வசமிருந்த ஆயுதங்களையும் கைப்பற்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது தமது தரப்பில் பொலிஸார் ஒருவரும் படை வீரர் ஒருவரும் காயமடைந்திருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

## 'நியாப்' திட்டத்தின் கீழ் குளங்கள் புனரமைப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 'நியாப்' திட்டத்தின் கீழ் பதினான்கு விவசாயக் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. இவற்றில் மூன்று குளங்கள் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் அமைந்துள்ளன. இதனால் இக் குளங்களைப் புனரமைக்க பாதுகாப்புத் தரப்பில் அனுமதி வழங்கப்படாதிருந்தது.

விவசாயிகளது நலன்கருதி இக்குளங்கள் அனைத்தையும் புனரமைக்க அனுமதியளிக்குமாறு இனவிவகார தேசிய நல்லிணக்கப் பிரதியமைச்சர் சோமசுந்தரம் கணேஷமூர்த்தி பாதுகாப்பு உயரதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

'நியாப்' திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மகாணத்திலுள்ள விவசாயக் குளங்களைப் புனரமைக்க உலக வங்கி நிதியுதவி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(ச-108)

## பாடசாலை மாணவர்க்கு புதிய அடையாள அட்டை

(ஏறாவூர்)

பாடசாலை மாணவர்களுக்கு கணனி மூலம் தயாரிக்கப்பட்ட புதிய அஞ்சல் அடையாள அட்டைகளை வழங்க தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருவதாக பிரதித் தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தினால் இதுகாலவரை வழங்கப்பட்டுவந்த அடையாள அட்டை நீண்ட நாட்கள் பாவிக்க முடியாதுள்ளதால் பாதுகாப்பு முறையிலான அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

அடுத்த ஆண்டிலிருந்து தபால் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும் அஞ்சல் அடையாள அட்டையினைப் பாடசாலை மாணவர்கள் வயதுக்கட்டுப்பாடின்றி பெற்றுக் கொள்வதோடு தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடியதாக அதிக விபரங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

மாணவர்களில் ஆண்களுக்கான அடையாள அட்டை நீல நிறத்திலும் பெண்களுக்கான அடையாள அட்டைகள் இளஞ்சிவப்பு நிறத்திலும் காணப்படும்.

கடந்த முப்பது ஆண்டுகளாகத் தபால் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வந்த அடையாள அட்டையின் மாதிரி தற்போது மாற்றியமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-108)

## பின்தங்கிய பிரதேச மாணவருக்குகணிதப்பயிற்சி

(கோப்பாய்)

தரம் ஐந்து, தரம் பத்து ஆகிய வகுப்புக்களில் 2001 ஆம் ஆண்டில் கல்விகற்கும் மாணவர்களுக்கான கணித வகுப்புக்கள் பின் தங்கிய பிரதேசப் பாடசாலைகளில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனதா கல்வித் திட்டத்தின் கீழ் யாழ்.முறைசாராக் கல்வி மேம்பாட்டுப் பிரிவினரால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இத்திட்டம் டிசம்பர் ஜனவரி மாதங்களில் பயிற்சியளிக்கப்பட்ட போதனாசிரியர்கள் மூலம் வழங்கப்படவுள்ளதாக முறைசாராக் கல்விச் செயற்றிட்ட அலுவலர் ச.சிவானந்தன் தெரிவித்துள்ளார். (ச-79)

## புலிகளின் ஆதரவு அமைப்புக்களை இந்தியாவில் தடைசெய்வதை எதிர்க்கப் போவதில்லை!

### தமிழக முதல்வர் உறுதிபடத் தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புக்களை இந்தியாவில் தடை செய்யும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டேன்.

இவ்வாறு தமிழக முதல்வர் மு. கருணாநிதி, திராவிட முன்னேற்றக் கழக முக்கிய உறுப்பினர்களுடன் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற சந்திப்பின் போது உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் இயங்கும் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவுப் படைகளான தமிழ்நாடு விடுதலை இயக்கம், தமிழ் நாடு விடுதலைப் படை என்பவற்றைத் தடைசெய்யும்நடவடிக்கைக்கு தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவிக்காதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் விதித்திருக்கும் தடையை நீக்கவேண்டும்என ம. தி. மு. க. செயலர் வை. கோ. வின் கோரிக்கை குறித்து கருணாநிதியிடம் இச் சந்திப்பின் போது விளக்கம் கேட்டதற்கு அது வை. கோ. வின்கருத்துஎனவும்தெரிவித்துள்ளார்.

இதே சமயம்;

ம. தி. மு. க. செயலர் வை. கோ. விற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றனவா என்பதுகுறித்து ஆராயும்வகையில், இந்திய மத்திய புலனாய்வுக் குழுவினர் கொழும்பிற்கு விஜயம் மேற்கொண்டதாக வெளியான செய்திகளை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் மறுத்துரைத்திருப்பதும்குறிப்பிடத்தக்கது. (உ)

### ஏவுகணை பரிசோதிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் புதிய ஏவுகணை ஒன்றை அண்மையில் சோதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பக்தசிக்கின் என்று பெயர் சூட்டப்பட்ட இந்த ஏவுகணை டாங்கிகளைத் தாக்க வல்லது.

நூறுமீற்றர் தொடக்கம் மூவாயிரம் மீற்றர் வரை சென்று டாங்கிகளைத் தாக்க வல்லதுஇந்தபக்தசிக்கின் ஏவுகணை என்றுசொல்லப்படுகிறது. (து)

**உலக தரிசனம்**

## புதுடில்லி நாடாளுமன்றில் கூச்சல்; குழப்பம்

### அமைதியை நிலைநாட்ட சபாநாயகர் முயற்சி

(புதுடில்லி)

புதுடில்லி நாடாளுமன்றில் நேற்று முன்தினம் ஒரே கூச்சலும் குழப்பமும் நிலவியதாகவும் சபையில் அமைதியை நிலை நாட்ட சபாநாயகர் பெரிதும் பாடுபட வேண்டி ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பான குற்றச் சாட்டில் அமைச்சர்கள் எல். கே. அத்வானி, உமா பாரதி முரளிமனோகர் ஜோசி ஆகியோர் குற்ற வாளிகளெனக் கருதப்பட்டதால் பதவி விலக வேண்டும் என்று கோரியே நாடாளுமன்றத்தில் குழப்பம் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் புதுடில்லியில் நாடாளுமன்றம் கூடிய போது நீதிமன்றத்தில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட மூன்று மந்திரிகளும் உடன் விலக வேண்டும் என எதிர்க்கட்சியினர் சபையின்மத்தியில் வந்து கூச்சலும் குழப்பமும் செய்தனர். சபாநாயகர் அமைதியை கடைப்பிடிக்கும் படி கேட்டுக் கொண்டார்,

சபையினர் அடங்காத பட்சத்தில் சபாநாயகர் சபையை ஒத்தி வைப்பதாகத் தெரிவித்தார். [து]

## மேற்குவங்க வெள்ள அனர்த்தம் நிவாரணம் வழங்க மத்திய அரசு மறுப்பு

(கல்கத்தா)

மேற்கு வங்கத்தின் வெள்ள நிவாரணத்துக்கு மத்தியஅரசு எவ்வித உதவியும் வழங்கவில்லை என்று மாக்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சித் தலைவர் சட்டர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்குவங்க வெள்ள அனர்த்தங்களால் பல இலட்சம் மக்கள் வீடுவாசல்கள் பொருள் பண்டங்களை இழந்து ஏதிலிகளாய் குடிபெயர்ந்து வேறு இடங்களில் இருந்தனர் என்று கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

ஐயாயிரத்து அறுநூறு கோடிரூபா இந்த வெள்ளத்தால் மேற்குவங்கம் இழந்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இவ்விடயம் சம்பந்தமாக மத்திய அரசு பாரபட்சம் காட்டுவது ஜனநாயக மரபுகளுக்கு ஒவ்வாதது என்றும் தெரிவித்துள்ளார். (து)

### யுத்த நிறுத்தம்

## முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு பாகிஸ்தான் பச்சைக் கொடி

(புதுடில்லி)

இந்தியா ரம்ழான்யுத்தநிறுத்தத்தை அறிவித்ததைபாகிஸ்தான் ஏற்று முத்தரப்புபேச்சுக்குவருமாறு பாகிஸ்தான் பச்சைக் கொடி காட்டியுள்ளது.

ஏககாலத்தில் தீவிரவாதிகள் பாகிஸ்தான்- இந்தியா ஆகியவை பேச்சில் ஈடுபடுவதை தாம் விரும்புவதாக பாகிஸ்தான்அறிவித்துள்ளது.

இதேவேளை முத்தரப்புப் பேச்சுவார்தைக்கு தாம் ஒருபோதும் சம்மதிக்கப் போவதில்லையென்று இந்திய பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார், ஆனால் இந்தியஅரசும் தீவிரவாதிகளும் தனியாகப்பேசி முடிவுக்கு வரும் அதேபோல் இந்திய அரசும் பாகிஸ்தானும் பேச்சுகளில் ஈடுபடும் ஆனால் மூன்றும் ஒரு மேசையில் பேச்சுவார்த்தைக்கு கூட்டப்படமாட்டாது என்று வாஜ்பாய் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். (து)

### பிரித்தானியா உறுதிமொழி வழங்குமாயின்

## ஆயுதங்களை கைவிடுவதற்கு வட-ஜரிஷ் விடுதலைஅமைப்பு தயார்

(டப்ளின்)

வடஅயர்லாந்தை அமைதி நாடாக உருவாக்க பிரித்தானியா உறுதிப்படுத்தினால் தாங்கள் ஆயுதங்களைக் கைவிடுவதாக அயர்லாந்து விடுதலை இயக்கம் கூறியுள்ளது.

அந்த இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் மேலும் தெரிவிக்கையில்; வடஅயர்லாந்தின் முக்கிய பகுதிகளில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரிலும் பொலிஸாரிலும் ஒரு பகுதியைக் குறைத்துக்கொண்டால் தாம் ஆயுதங்களைக் கைவிடப் போவதாக குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் வட. அயர்லாந்துக்கு வருவதற்கிடையில் இந்த படைவீரர்களையும் பொலிஸாரையும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அதன்பின் தாங்கள் ஆயுதங்களை வைக்கலாமென்றும் தெரிவித்தார். (து)

## அமெரிக்கா பயணமாகும் பண்டாக் இனக் கரடிகள்

(பீஜிங்)

சீனாவிலிருந்து இரண்டு பண்டாக் இனக் கரடிகள அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

உலகிலே அபூர்வ இன கரடி இனத்தைச் சேர்ந்த இவை சீனாவில் உள்ள போலோஸ் உயிரியல் பூங்காவிலிருந்து அமெரிக்காவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க – சீன நட்புறவின் சின்னங்களாக இவை அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## டயானாவின் உருவம் பொறித்த நாணயம இலண்டனில் வெளியீடு

(இலண்டன்)

வேல்ஸ் இளவரசி காலஞ்சென்ற டயானாவின் உருவம் பொறிக்கப்பட்டபுதிய நாணயம்இலண்டனில்அண்மையில் வெளியிடப்பட்டது.

அதில் ஒரு பக்கத்தில் டயானாவின்உருவமும், மறுபக்கத்தில் எலிசபெத் மகாராணியின் உருவமும் பொறிக்கப்பட்டிருந்தது.

ஐந்துபவுண் பெறுமதியான இந்த நாணயம் வெளியிடப்பட்டபொழுதுபலரும்கூடுதல் விலை கொடுத்து வாங்கினார்களாம்.

இந்தநாணயத்தால்சேர்ந்த நிதி டயானா நினைவு நிதியத்திற்குக் கொடுக்கப்பட்டதாம். (து)

## புதிய மந்திரிகள் நேற்று ஜப்பானில் பதவி ஏற்பு

(டோக்கியோ)

ஜப்பானிய பிரதம மந்திரி ஜெசீரோமோரி புதியமந்திரி சபையை அறிவித்துள்ளார்.

முன்னாள் பிரதம மந்திரிகள் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்இந்தமந்திரி சபையில் அடங்குகிறார்கள்.

மொத்தம் பதினெட்டு அமைச்சர்கள் இந்த அமைச்சர் அவையில் இடம் பெறுகிறார்கள்.

நேற்று முன்தினம் பழைய மந்திரி சபைகலைக்கப்பட்டது புதிய மந்திரிகள் நேற்று முன்தினம் இரவு சத்தியப் பிரமாணம் செய்ததாக அறிவிக்கப்படுகிறது (து)

## பொருளாதார வளர்ச்சி மேலும் அதிகரிப்பு

### உலகவங்கி துணைத்தலைவர் தெரிவிப்பு

இந்தியாவின் பொருளாதாரவளர்ச்சி வீதம் மேலும் மூன்று அரை வீதத்தால் கூடியிருக்கிறதென்று உலகவங்கியின் மூத்த துணைத்தலைவர் மிக்ஸ்ரான் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரவளர்ச்சியில் பலவழிகளிலும்இந்தியாதுரித முன்னேற்றம் அடைந்து வருவதாகவும் நிருவாகத்திறனும் தொழில் நுட்பத்திறனும் ஒன்றாக இந்தியாவின் பெரும் வளார்ச்சியை கொடுக்கும் வேளையில் மின்சாரம், கல்வி, தொழில் நுட்பம் மேலும் வளர்ச்சியடைகின்றன வென்றும் உலகவங்கிதுணைத்தலைவர் தெரிவித்தார்.

மேலும் இந்திய பொருளாதாரம் முன்னேறுவதற்கு அரசஸ்தாபனங்கள்தனியார் மயம் தேவையென்று வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக அரசவங்கிகள் தனியார் மயமாக வேண்டும் என்றும் அது இந்திய பொருளாதாரவளர்ச்சிக்கு உறுதுணையாகுமென்று உலகவங்கித் துணைக்தலைவர் மிக்ஸ்ரான் தெரிவித்தார். [து]

## பிரிவுத்துயர்பகிர்வு

### சதாசிவம் நடராசா

அரியாலையைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் நடராசா காலமானார்.

இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன

தகவல்: ந. தேவகுமார் (மகன்)

### கந்தையா சிவக்கொழுந்து

மாதகலைப் பிறப்பிடமாகவும் மாங்குளத்தில் வசித்தவருமான கந்தையா சிவக்கொழுந்து 5. 12. 2000 அன்று சிவபதமெய்தினார்

தகனக்கிரியைகள் நேற்று திருநெல்வேலியில் நடைபெற்றன.

தகவல்: சி. சோதிமூர்த்தி (மகன்)

### கந்தையா தியாகராஜா

காரைநகரைப் பிறப்பிடமாகவும், வவுனியாதவசிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தியாகராஜா 5. 12 2000 அன்று காலமானார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று நடைபெறும்.

தகவல்: இந்துராணி (மனைவி)
வவுனியா

### செல்லையா சிவசுப்ரமணியம்

பூநகரியைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சிவசுப்ரமணியம் 5 ஆம் திகதி சிவபதமடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் வவுனியாவில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்: சி. சிவா (மகன்)
வவுனியா

### எஸ். கே. நடராசா அன்னலிங்கம்

புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா அன்னலிங்கம் 3 ஆம் திகதி காலமானார்.

தகனக்கிரியைகள் நேற்று கொழும்பில் நடைபெற்றன.

தகவல்: பூரணம் (தாய்)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.
- குறள்

# வலம்புரி

## டெங்கு அபாயம்

யாழ் குடாநாட்டில் டெங்கின் அபாயம் ஏற்படக்கூடிய சாத்தியம் பற்றி மருத்துவத் துறையினர் எச்சரிக்கை செய்துள்ளனர். கிழக்கு மாகாணம், கொழும்பு ஆகிய இடங்களில் வேகமாகப் பரவிவரும் டெங்கு காய்ச்சல் யாழ்ப்பாணத்திலும் பரவக்கூடிய சாத்தியம் உண்டு. அதற்குச் சான்றாக டெங்குக் காய்ச்சல் அறிகுறியுடைய ஒருவரை யாழ் போதனா வைத்திய சாலையில் இனங்கண்டுள்ளனர்.

யுத்த அனர்த்தம் அதன் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகள், போசாக்கின்மை போன்ற காரணங்களினால் இந்நோயின் பரம்பல் கட்டுக்கடங்காமல்கூடப் போகலாம். அவ்வாறு ஒருநிலை ஏற்பட்ட பின்பு ஆராய்வதைவிட வருமுன்னர் காப்பதே சாலச்சிறப்பாகும்.

நுளம்பினால் பரப்பப்படும் டெங்குக்காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு முதலில் நுளம்பின் பெருக்கத்தை முற்றுமுழுதாக ஒழிப்பதே ஒரே வழியாகும். நீர்த்தேக்கங்கள், உடைவுள்ள வடிகால்கள், ஆழம்குறைந்த பாவனையற்ற கிணறுகள், மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய குண்டுகுழிகள், வெற்றுப் பேணிகள் போன்றவையே நுளம்பு பெருகும் இடங்களாகும்.

ஆட்களற்ற காணிகளிலுள்ள பற்றைகளும் மிதிவெடிகளின் அபாயங்களினால் பாவனையற்றுக் குட்டிக் காடாகக் காணப்படும் இடங்களும் நுளம்புகளின் தரிப்பிடமாக அமைந்துள்ளது.

டெங்கின் அபாயத்தை உணர்ந்து நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அதன் விளைவாக அனோபிலிஸ் கியுலிபேசிஸ் என்ற நுளம்பினால் ஏற்படக்கூடிய மலேரியா நோயினையும் கட்டுப்படுத்த முடியும். அதுமட்டுமன்றி. வடபுலத்து மக்கள் இரவிலும் பகலிலும் நுளம்பின் தொல்லையால் பெரும் கஸ்ரத்தை எதிர்நோக்கி உள்ளனர். யுத்தத்தின் நேரடித் தாக்கம் உறைவிடத்தை-உறவைத்தான் பிரித்தாலும் நிம்மதியாக உறங்குவதற்குக் கூட நுளம்பு அனுமதிப்பதாக இல்லை.

எனவே நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் பணி தனியே சுகாதார சேவையென எண்ணாது, மக்களும் இதில் பங்கேற்க வேண்டும். இதற்கு வசதியாக பிரதேச சபைகள், நகர சபைகள் தமது பகுதியில் சுகாதாரக் குழுக்களை - தொண்டர் குழாமை உருவாக்கி நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளைபிரச்சாரங்களை தீவிரப்படுத்தவேண்டும்

1995-ம் ஆண்டில் யாழ் மாநகரசபைப் பகுதியில் தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் 'நோய்க்காவி கட்டுப்பாட்டுப் பிரிவு' (Vector Control unit) ஒன்றை உருவாக்கினார். அப்பிரிவின் செயற்பாடு யாழ் நகரத்தில் பெருவெற்றியளித்தது. அதுபோன்றுஏனைய பிரதேச சபைகளும் தமது பகுதிகளில் காவிகள் கட்டுப்பாட்டுப் பிரிவுகளை விசேடமாக உருவாக்குவதன் மூலம் நுளம்பின் பெருக்கத்தை - தொற்று நோயை கட்டுப்படுத்த முடியும். அதனை விரைவாகச் செயற்படுத்துவதிலேயே டெங்கின் அபாயம் தவிர்க்கப்படும்.

# மலேசியாவில் சைவமும் தமிழும் கோலோச்ச மகத்தான பங்காற்றும் யாழ். மைந்தர்கள்

**அ. குலவீரசிங்கம்**

சைவசமய வளர்ச்சிக்கு மலேசியத் தமிழர்கள் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளனர். இவர்களில் பலர் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். ''திருக்கைலாய பரம்பரை'' என்ற பெயரில் ஒரு அறக் கட்டளை அமைத்து அரிய பல பணிகளைச் செய்கின்றது. இதனை அமைத்தவரில்முதன்மையாளர் ஆறுமுகம் ஐயா என்று பலராலும் அன்புடன் அழைக்கப்படும் 93 வயது மூதறிஞர் இவ்வறக்கட்டளை ஆண்டு தோறும் யாழ்ப்பாணம்சைவப்பெரியார்சிவபாத சுந்தரனாருக்குக் குருபூசை நடத்தி, அவரின் நூல்களில் ஒன்றையும் மீள்பதிப்புச் செய்து வெளியிடுகிறது.

இவ் ஆண்டு அவரின் குருபூசை 19.8.2000 ல்சிறப்பாக நடைபெற்றது அவரின் 'கந்தபுராணம் விளக்கவுரை' என்ற நூலும் வெளியிடப்பட்டது. இக்குருபூசை விழாசைவ சித்தாந்த கலா நிதி டான்ஸ்ரீ மு. சோமசுந்தரம் என்ற அறிஞரின் தலைமையில் நடைபெற்றது இவர் தமிழ் நாட்டைப் பூர்வீகமாகக்கொண்ட பலராலும் மதிக்கப்படும் அறிஞர். நூல் ஆய்வுரை செய்த டாக்டர் தேவபூபதிநடராசா யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டஒய்வு பெற்ற பல்கலைக்கழகப்பேராசிரியர். இவ்விழாவில் ''சிவபாத சுந்தரனாரின்'' சைவக் கோட்பாடு''என்றதலைப்பில் சிறப்புரை இடம் பெற்றது'' இச்சிறப்புரையை ஆற்றியவர் யாழ்ப்பாணத்துக் குப்பிளானில் பிறந்தபொறியியலாளரும் கவிஞருமான இலண்டன் மெய்கண்டான் ஆதீனப் புலவர் சித்தாந்தரத்தினம் க.கணேசலிங்கம் அவர்கள். தமிழகத்தில் தற்காலிகமாக வசிக்கும் இவர் உலக சைவப் பேரவையின் முக்கிய உறுப்பினரும், அப்பேரவையின் 'சைவ உலகம்'' சஞ்சிகையின் துணை ஆசிரியருமாவார்.

ஆறுமுகம் ஐயா போல் அரும் பெரும் பணிகள் செய்தவர் ஆர்.வி.கந்தையா என்பவர். காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், 'மலேயா அருள் நெறித்திருக்கூட்டம்''என்ற அமைப்பை நிறுவுவதில் முன்னின்று உழைத்தவர். பல இலட்சம் ரூபா சேர்த்து மதுரைக்காமராசர் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத் துறையை உருவாக்கியவர்களில் முன்னின்று உழைத்தவர் இவர். சென்னையிலுள்ள சைவசித்தாந்தப் பெருமன்றத்துக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்கி சைவ சித்தாந்த நூல்களைப் பதிப்பிப்பதற்கு ஒரு அறக்கட்டளையை அமைத்தார்.' சிவஞானபோதம் சிற்றுரைவிளக்கம்''என்ற அரிய நூல் இவ்வறக் கட்டளையால் வெளியிடப்பட்டது. இந்திய வம்சாவழித் தமிழர் பலர் இன்று சைவசமயத்தில் ஈடுபாடு கொண்டு அரும்பெரும் பணிகளைச் செய்கின்றனர். 31. 8. 2000 ''மலேயா அருள் நெறித்திருக்கூட்டம்'' மண்டபத்தில் ''திருமுறை வழி இல்ல வழிபாடு''பற்றிய பயில் அரங்கு ஒன்று நடைபெற்றது. மாணவர்களும் முதியவர்களும்ஆர்வத்துடன்பங்கு பற்றிய இப்பயிற்சிப்பட்டறையில் வைத்திய கலாநிதி, பொறியியலாளர் போன்ற உயர் அதிகாரிகளும் பங்குபற்றினர். சிவபூசகர் சண்முகம் இவ் வழிபாடு பற்றிய விளக்கங்களை அளித்து, இல்லத்தில் திருமுறை சொல்லி வழிபாடு செய்வது பற்றிச் செய்முறை விளக்கம் அளித்து பயிற்சி வகுப்பினை நடத்தினார்.

இந் நிகழ்ச்சியின் இறுதியில் ''அறிவியல் நோக்கில் சைவ சித்தாந்தம்''என்றதலைப்பில் சித்தாந்தரத்தினம் கணேசலிங்கம் சிறப்புரையாற்றினார் அவரின் சொற்பெழிவுகள் அங்குள்ளதிருக்கோயில்களில்இடம்பெற்றன திரண்டு வந்து பலரும் கேட்டனர்.

கோலாலம்பூரில் சைவசித்தாந்த வகுப்புகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. கயாங் என்ற இடத்தில் நடக்கும் சித்தாந்தவகுப்பில்சிறப்பு குறிப்பு எடுத்து, சைவசித்தாந்தம் குறித்த மாணவரின் ஐயங்களை கணேசலிங்கம் தீர்த்து வைத்தார். அவரின் சைவ சித்தாந்த விளக்கங்களும், சொற்பெழிவுகளும், கோலாலம்பூர் வாழ் சைவத் தமிழருக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தன

# இலங்கையில் யுத்தம் நிறுத்தப்படாவிட்டால் இந்துக்கள் சிறுபான்மையினராவர்

## இந்துப் பேரவை பிரதமர் வாஜ்பாய்க்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தொடரும் யுத்தம் உடன் நிறுத்தப்பட்டு சமாதானம் ஏற்படாமல் போகுமாயின், இந்துக்கள் வடக்கு- கிழக்கில் சிறுபான்மையினராகும் சூழ்நிலையே காலப்போக்கில் ஏற்படும். ஒரு அவல நிலை தற்போது காணப்படுகின்றது.

''இந்துக்களை நலிவிலிருந்து காத்திட சமாதானத்திற்கு பூரண ஒத்துழைப்பு நல்கிடுவீர்'' என்ற தலைப்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக, இந்திய பிரதம மந்திரி அடல்பிஹாரி வாஜ்பாய்க்கு வடபிராந்திய இந்துப் பேரவையினர் அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும்சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது;

உடன் யுத்தம் நிறுத்தப்பட்டு, விடுதலைப் புலிகளுக்கும். இலங்கை அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு விரைந்து சமாதானத்தீர்வு எட்டப்பட்டால் மட்டுமே இந்துக்களின் இந்த நிலைக்கு தீர்வு காண முடியும்.

அந்தவகையில் தற்போது ஆரம்பமாகியுள்ள இலங்கை அரசுக்கும்- விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைபூரணவெற்றியளிப்பதற்காக இந்திய அரசு இதய சுத்தியுடன் நல்லாதரவினை நல்குதல் வேண்டும்.

இலங்கைத்தீவில் தொடரும் உள்நாட்டு யுத்தத்தால் மிகமோசமாக பாதிக்கப்படுவது இலங்கைவாழ் இந்துக்களேயாவர்.

குறிப்பாக யுத்தம் நடைபெறும் வடக்கு- கிழக்குப் பகுதிகளிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு மற்றும் யுத்த கெடுபிடிகளால் இந்து அமைப்புக்கள், இந்து ஆலயங்கள், இந்துக் குருமார்கள், இந்து சமயப் பெரியவர்கள் உட்பட இந்துக்கள் பலர் ஏனைய சமயத்தவர்களைக் காட்டிலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு நலிவடைந்து வருகின்றனர்.

இதனால் கடந்த 20 வருடங்களில் சுமார் ஒருஇலட்சம் இந்துக்கள் இந்து சமய கலாசாரங்களை கைவிட்டுள்ளதுடன், பிற சமயங்களுக்கும் மதம் மாறியுள்ளனர்.

குறிப்பாக நாட்டின் வட பகுதியில் இது மிகவும் அதிகமானதாகவுள்ளது. யுத்தமும், இடப் பெயர்வுகளும் தொடர்ந்தால், இந்துக்கள் உதவிகள், சலுகைகள் என்பவற்றுக்காவும் உயிரைக்காப்பாற்றுவதற்காகவும் தமது சமய கலாசாரங்களைகைவிடுவதுநாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.

மாண்புமிகு தாங்களும் தங்களுடைய அரசும் இந்துக்களது நலன்களில் முன்னைய இந்திய அரசுகளைக் காட்டிலும் மேலான இதய சுத்தியான அக்கறைகொண்டவர்கள் என்ற வகையில் இலங்கை ஜனாதிபதிக்கும் விடுதலைப்புலிகளின் தலைவருக்கும் இடையில் பேச்சுவார்த்தை வெற்றியடையவும், நீதியான சமாதானம் ஏற்படவும் தோதான ஒத்துழைப்புகளை வழங்கி இந்து கலாசாரமும், பண்பாடும் பேணிப்பாதுகாக்கப்பட உதவவேண்டும் உ

## ஆசீர்வாதம்

(யாழ்ப்பாணம்)

புத்தாயிரமாம் ஆண்டில், க. பொ. த. (சா/த) தேர்விற்கு தோற்றும் மாணிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கான குரு ஆசீர்வாத வைபவம் நேற்று இடம்பெற்றது. (உ)



## சாயி அருள் அமுதம்

பக்தியெனப் படுவது ஒருவர் தொடக்கிய அல்லது உதவியளித்த ஸ்தாபனங்களின் அடிப்படையிலோ அல்லது ஒருவர் கட்டிய அல்லது புனருத்தாரணம் செய்த கோவில்களின் அடிப்படையிலோ அல்லது ஒருவர் வழங்கிய நன்கொடைகளின் அடிப்படையிலோ கணக்கிடப்படுவதில்லை.

அது மட்டுமன்றி எத்தனைதடவை இறைவன் நாமத்தை ஒருவர் எழுதியிருக்கிறார்என்பதிலோ அல்லதுகடவுளை வணங்குவதில் எவ்வளவு நேரத்தையும், சக்தியையும் செலவழித்தார் என்பதிலோ கூட அது தங்கியிருக்கவில்லை இவையெல்லாம் முக்கியமானவையேயல்ல. இல்லை, இல்லை! இரண்டாம் பட்சமானவையென்று கூடச் சொல்ல முடியாது. பிரேமை- அதாவது அதிலிருந்து பிறக்கக்கூடிய நன்மைகள் மீதுள்ள ஆசையாலோ அல்லது அதனாலேற்படும் விளைவுகள் மீதுள்ள ஆசையாலோ கறைப்படுத்தப்படாத, மாசற்ற பிரேமை- அதுவே பக்தியாகும்.

நன்றி

**நாளாந்த நற்சிந்தனை**

# நோர்வே நாட்டினால் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது

## ஜே.வி.பி செயலர் தூதருக்குக் கடிதம்

(கொழும்பு)

இலங்கையில் நோர்வே போன்ற நாடுகளால் சமாதானத்தைக் கொண்டுவர முடியாது. அந்நாடுகளுக்கு அது வேண்டியதுமல்ல. இவ்வாறு ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா இலங்கைக்கான நோர்வேயின் தூதுவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் விவகாரத்தில் தலையிடும் ஒவ்வொரு நாடும் சமாதான நோக்கினைக் கொண்டிருக்கவில்லை மாறாக தமது ஏகாதிபத்திய‌த் திட்டங்களை அறிமுகப்படுத்துவதே அவர்களின் நோக்கமாகும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

பயணச்சீட்டு கிடைக்காத சிலர்

## றான் இணைப்பாளரை தாக்கமுற்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபை [றான்] அலுவலக இணைப்பாளர் எஸ். குகராஜனை பொதுமக்கள் சிலர் தாக்கமுற்பட்டனர்.

யாழ்.புகையிரத நிலையத்தில் நேற்று இடம் பெற்ற பிரயாண பதிவின் போது பயணச் சீட்டு கிடைக்காத சிலரே அவரை தாக்க முற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தைஅடுத்துகுறிப்பிட்ட நபர்களைதமிழ்அரசியல்கட்சிஉறுப்பினர்கள்சிலர் எச்சரித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-02)

### இந்தியாவிலிருந்து...

களை நாடு கடத்திவிடுவதே நல்லதென பாதுகாப்புத் துறையினர் கருதுவதாகவும்.

இதனால் தமிழ்நாட்டில் வாழும் ஈழத் தமிழர்கள் சிலர் இலங்கைக்கு நாடுகடத்தப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்படும் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு விடயத்தில்இலங்கைப் பொலிஸார் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமென இந்திய அதிகாரிகள் இலங்கை அரசிடம் கேட்டுள்ளதாகவும்,

அதன் காரணமாகவே இந்தியாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட ஈழவேந்தனை பொலிஸார் கைது செய்ய வில்லை எனவும் தெரியவருகிறது. (ந)

ஸ்ரீ செல்வா
(யாழ்ப்பாணம்)
வெங்கடேஸ்
நடிப்பில்
அழகே உன்னை காதலிக்கிறேன்
D பிரதிபுதிய வெளியீடு
0.30 2 30 (ப-நேரம்)
[கி-688]

### கனகராயனில் மிதிவெடிகள் மீட்பு

(வவுனியா)

கனகராயன் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் 140 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா அமைப்பினால் இம் மிதிவெடிகள் மீட்கப்பட்டது. (ந-5)

### பேச்சுக்கு.

வார்த்தைக்கான நிகழ்ச்சித் திட்டத்தை அரசு அமுல்செய்யும் என்றும் பிரதமர் கூறினார்.

பத்திரிகையாளர்களின் கேள்வியொன்றிற்குப் பதிலளித்த பிரதமர்பேச்சுவார்த்தைக்கு நிபந்தனையாக போர் நிறுத்தத்தை ஒரு போதும் அரசு ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

என்னைப் பொறுத்தவரை போருக்குப் போர் என்பது தான் எனது நிலைப்பாடு. ஆனால் ஜனாதிபதியின் யோசனைகளுக்கு எதிரான கருத்துக்களைத்தான் கொண்டிருக்கவில்லை எனவும் பிரதமர் தெரிவித்தார். (ந)

### மாணவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கல்வி கற்று, தற்பொழுதுவலிகாமம்ப குதியில் இடம்பெயர்ந்து இருக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களைநாளை காலை 9.00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஒன்றுகூடுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

மாணவர்கள் வரும்போது பரீட்சை அனுமதி அட்டையையும் அதன் போட்டோ பிரதிஒன்றையும் கொண்டு வருமாறும் அவர் கேட்டுள்ளார்.

இச்சந்திப்பின் போது பரீட்சை நிலையம் பற்றி அறிவிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### ஆலோசனை கூட்டம்

அச்சுவேலி பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான விசேட ஆலோசனைக் கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு வலி கிழக்குபிரதேச சபையின்அச்சுவேலி உப அலுவலகத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு அச்சுவேலிப் பகுதி பொது அமைப்புக்களை கலந்துகொள்ளுமாறு அச்சுவேலி அபிவிருத்திச் சபைத்தலைவர் சின்னமணி கேட்டுள்ளார். (இ-57)

### இனிகிர.5---

இலக்காகியதாகவும், காயம் அடைந்த இராணுவத்தினர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது, (ம)

## நட்ட நடு நிசியில் கரிய உருவம் நடமாட்டம் கூச்சலிட்ட பெண் பொலிஸ்

(கொழும்பு)

பொலிஸ் விடுதியில் நள்ளிரவு வேளையில் நடமாடிய கரிய உருவத்தை கண்டு பயப்பிராந்தியால் கூக்குரல் இட்டனராம் பெண் பொலிஸார்.

கண்டி அஸ்கிரிய பெண்கள் பொலிஸ் விடுதியில் அண்மையில் இடம் பெற்ற நகைப்புக்கிடமான இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

நள்ளிரவு ஒரு மணியளவில் மேற்படி பொலிஸ் விடுதியில் இருந்த அனைவருமேஉறக்கத்தில் இருந்த வேளையில் கரிய உருவமொன்று அங்குமிங்குமாய் நடமாடியதாம்:

இதனை அவதானித்த விடுதியில் இருந்த பெண் பொலிஸார் பெருங்குரல் எடுத்து கூக்குரலிடவே அவ்வுருவம் மாயமாய் மறைந்து விட்டது.

இதனையடுத்து அச்சுற்று வட்டாரத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் உடன் தேடுதல் நடத்திய போதிலும் எவரும் அகப்படவில்லை.

இருந்தபோதிலும் இவ்விடயம் மேல் மட்டத்தவர்களின் கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்து கரிய உருவுடன் கள்ளத்தனமாய் நடமாடியவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

வேறு யாருமல்ல கண்டியில் வேறோர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஆண் பொலிஸார்தான். (உ)

### சமாதானப்...

யாகப்பர் ஆலயம், புனித யுவானியார் ஆலயம் ஆகியவற்றிலிருந்து செபமாலைகளை கையிலேந்தி செபித்த வண்ணம் ஊர்வலமாக யாழ் மரியன்னை பேராலயத்திற்குச் செல்வதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ். பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆரம்பத்தில் அனுமதியளித்திருந்த போதிலும் பின்பு திடீரென இச்சமாதானப் பேரணிக்கு அனுமதி வழங்க முடியாதென அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (ந-12)

### யாழ்----

கத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நிதி உதவி செய்ய வேண்டும் என்று பாராளுமன்றத்தில்கேட்டது தொடர்பாகவே ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (வ-இ)

### பஸ்வண்டி

கொண்டிருந்த போதே மரம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வழக்கமாகஇவ்வீதிவழியாக செல்லும் இராணுவ தொடரணிக்கு இலக்குவைத்தே இக் கண்ணிவெடி வைக்கப்பட்டிருந்ததாகவும், இவ்வாகனத் தொடரணி சென்ற சற்று நேரத்தின் பின்பே கண்ணிவெடி வெடித்ததால் வாகனத் தொடரணிக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த பஸ் வண்டி சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட பொலிஸ்உத்தியோகத்தர் குருநாகலைச் சேர்ந்த கே. கருணாதாச எனவும், பஸ் சாரதி பாஸ்கரன் அற்புதராசா எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்த இரு வைத்தியகலாநிதிகள் கொழும்புவைத்தியசாலைக்கு விமானமூலம் எடுத்துச் செல்லப்பட்டனர்:

இக்குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை, என்றும்விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (வ-ச-60-110)

### சமாதானத்தை..:.

செய்திகளை வெளியிட்டு வருவதினால் அது சம்பந்தமானசெய்திகளைதணிக்கை செய்வது தொடர்பாகஅரசு ஆலோசித்து வருகிறது.

தென் இலங்கையில் உள்ள இனவாதப்பத்திரிகைகள் சிலசமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பிவிடும்நோக்கத்துடன் செய்திகளை வெளியிட்டுவருவதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைஅடுத்தே சமாதானப் பேச்சுவார்த்தைகளைக்குழப்பும் செய்திகளுக்குத்தணிக்கை கொண்டு வரவிருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

### மாட்டுவண்டில்----

மணிக்கு ஆரம்பமாகி 9.30 மணிக்குபாராளுமன்றத்தைச் சென்றடைந்தது.

மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த மாட்டு வண்டில் ஊர்வலத்தில் ஐ. தே. க. எம்.பிக்களான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா, திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் மஃறூப், வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்த உட்பட அநுராதபுரம், கொழும்பு, பொலநறுவ மாவட்ட ஐ.தே.கட்சி எம். பிக்களும் இரண்டு வண்டில்களில் பாராளுமன்றம் சென்றனர்.

மாட்டு வண்டில்களில் சென்றஎம்.பிக்களை பாராளுமன்றத்தில் வைத்து ஐ தே. கட்சியின் ஏனையஎம்.பிக்கள் வரவேற்றனர்.

பாராளுமன்றப் பொலிசார் தடை எதுவும் விதிக்காமல் பாராளுமன்ற வளவுக்குள் வண்டில்களைச் செல்ல அனுமதித்தனர். இந்த வண்டில்களில் பதாதைகளும், சுலோகங்களும் கட்டப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்துக்குத்தரை வழிப்பாதையைத் திறக்கக் கோரியும், வன்னிக்கு உணவு மருந்துப் பொருள்களை அனுப்பிவைக்கக் கோரியும், பெற்றோல் விலையை யாழ்ப்பாணத்தில் குறைக்கக் கோரியும் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. (வ)

### வைத்திய-----

பத்மநாதன் நிலக்ஷன் என்ற இரண்டு வயதுச் சிறுவன் அழுது கொண்டு மிக்சர் சாப்பிட்ட போது எதேச்சையாக ஒரு கச்சான பருப்பு மூச்சுக் குழாயினுள் சிக்கிக் கொண்டது. இதனால் மூச்சுதிணறி சுவாசிப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இச்சிறுவனுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்குரிய வைத்திய உபகரணங்கள் எதுவும் இல்லாத போதும் குறித்த வைத்திய நிபுணர் தனது அபாரமான மதிநுட்பத்தால் இருந்த உபகரணங்களைப் பயன்படுத்தி இச்சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு சிறுவனின் உயிரைக் காப்பாற்றியுள்ளார்.

துணிவுடன் செயற்பட்டு சிறுவனின் உயிரைக் காப்பாற்றிய சத்திர சிகிச்சை நிபுணரின் சாதனையை பலரும் பாராட்டியுள்ளனர். [இ-12]

கப்பல் மூலம் கொழும்பு செல்கின்ற பயணிகளுக்கு
இன்று முதல் ஏ. பி. எஸ். ரவல்ஸ் சேவையினரின் திருகோணமலை - கொழும்பு
கொழும்பு - திருகோணமலை பயண ரிக்கற் பெறும் இடங்கள்
யாழ்நகரில்:- மக்மிலன் புத்தகசாலை
இல. 3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல. - 021-2422
கொழும்பில்:- மக்மிலன் புத்தகசாலை
இல. 195 ஒல்கொட், மாவத்தை கொழும்பு - 11
தொலைபேசி இல. - 449565,331122
கொழும்பில்:- சன்கொம்
பீச் றோட் இல - 15/3 கொழும்பு-11
தொலைபேசி இல - 01-334245, 342253
074-718724, 721496
திருமலையில்:- கொழும்பு ஏஜென்சி
இல. 220 கஸ்ரம்ஸ் றோட் திருகோணமலை
தொலைபேசி இல. - 026-23249,
026-24635
★கொழும்பு நகருக்குள் விரும்பிய இடத்தில் இறக்கிவிடப்படுவர்
(கி-1092)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.